# தூய லூர்து அன்னை ஆலயம்


50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com


| | | |
|---|---|---|
| 15~10~2017 | பொதுக்காலம் 28ம் ஞாயிறு | முதல் ஆண்டு |



## மனிதாபிமான நிவாரண நிதிக்காக வேண்டுகோள்

வெளிநாட்டு மனிதாபிமான மற்றும் பேரிடர் நிவாரணம் CHARIS என்ற மனிதாபிமான நிவாரண அமைப்பு, தன் வருடாந்திர நிவாரண நிதிக்கான வேண்டுகோளை விடுக்கிறது. அதற்கான உறைகள் உங்கள் பங்கு அலுவலகத்தில் கிடைக்கும். மேலும் நீங்கள் உங்கள் காசோலைகளை "HUMANITARIAN AID FUND" என்று எழுதி, உங்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணுடன் CHARIS, #07-02, Catholic Centre, 55 Waterloo Street, Singapore 187954 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலும் விபரங்களுக்கு Victoria Lim (63374119) அல்லது info@charis-singapore.orgயைத் தொடர்பு கொள்ளவும். நன்றி.

## பொது விடுமுறை திருப்பலி நேரம்

தேதி : புதன், 18-10-2017

நேரம் : காலை 9:00மணி (ஆங்)

காலை10:00மணி(தமிழ்)



*பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

*ஆலயத்தின் நுழைவு வாயில் இரும்பு கதவுகள் (Main Gates) தமிழ் திருப்பலிக்குப் பின் மூடப்படும்.

# சிந்தனை

அன்புடையீர்,

இறைஇயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்! பொதுக்காலத்தின் 28ஆம் ஞாயிறுத் திருப்பலி விருந்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம்.

வாழ்வில் நமக்கு வந்துள்ள அழைப்புக்கள், அந்த அழைப்புக்களுடன் நமக்குக் கிடைத்த வாய்ப்புக்கள் எத்தனை, எத்தனை... இந்த அழைப்புக்களையும் வாய்ப்புக்களையும் ஏற்க மறுத்து, நாம் கூறிய சாக்கு போக்குகள் எத்தனை, எத்தனை... இவைகளைச் சிந்திக்க இன்றைய ஞாயிறு வாசகங்கள் நம்மை அழைக்கின்றன. இந்த அழைப்பை ஏற்போமா?

விருந்துண்ண அழைக்கும் இறைவன்... அழைப்பை ஏற்க மறுக்கும் நாம்... ஆகியவை இன்றைய வாசகங்கள் வழியே நமக்குத் தரப்பட்டுள்ள மையக் கருத்துக்கள். 'வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசம்' என்று எசாயா குறிப்பிடும் இந்த ஒரு பானத்தை உருவாக்க நேரமும், கவனமும் தேவை. நல்ல சுவையான திராட்சை இரசத்தை விருந்து நேரத்தில் பரிமாறுவதே ஒரு பெருமை. இந்தப் பெருமை பறிபோய்விடுமோ என்ற கவலையில் அன்னை மரியா கானாவூர் திருமணத்தின்போது இயேசுவை அணுகிய அந்த சம்பவம் நமக்கு நினைவிற்கு வருகிறது அல்லவா!

இறைவன் தரும் இந்த அழைப்பைவிட நம் தனிப்பட்ட, தினசரி வாழ்வே பெரிது என்று எத்தனை முறை நாம் வாழ்ந்திருக்கிறோம்? அந்த அழைப்பின் வழி வந்த நல்ல எண்ணங்களை எத்தனை முறை கொன்று குழிதோண்டி புதைத்திருக்கிறோம்? இந்தக் கேள்விகளுக்கு இன்றும், இனி வரும் நாட்களிலும் பதில்கள் தேடுவது நமக்கு மீட்பைத் தரும். அதற்காக சிறப்பாக இத் திருப்பலியில்

## இரண்டாவது காணிக்கை

கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடம் கொடுத்தல்) திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.




## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

தேதி : ஞாயிறு, 22-10-2017

நேரம் : மதியம் 2.30மணி



**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | வ | லை | லு | ம் | சூ | ழ | லி | லு | ம் |
| லை | ட | ஆ | ண் | ட | வ | ர் | ஆ | பு | யு |
| க் | து | ற் | சு | ழி | ய | ம் | ப் | சு | ழி |
| க | ரு | ற | ப் | க | க | ய் | பு | ப் | க |
| ல் | வ | ல் | நே | ங் | லா | றி | ஸ் | நே | ங் |
| லு | ம் | ன் | கோ | க | தி | க | ண் | கோ | டு |
| நெ | ல் | ரு | ங் | நெ | ரு | ளு | ரு | ண | நெ |
| டு | க | அ | பா | ப் | ம | மு | யை | த் | ப |
| நா | ண் | மா | ங் | கா | ண | வி | ரு | ந் | தை |
| ள் | க | ண் | க | க் | க | அ | ம | க | வு |

1. அனைவருக்கும் சிறந்ததொரு _________ ஏற்பாடு செய்வார்.
2. ஆண்டவரின் _________ இம்மலையில் தங்கியிருக்கும்.
3. நான் ஆண்டவரின் இல்லத்தில் _________ வாழ்ந்திருப்பேன்.
4. உமது கோலும் _________ என்னைத் தேற்றும்.
5. எந்தச் _________ வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்.
6. உங்கள் _________ ஒளியூட்டப் பெறுவனவாக.
7. அங்கே அழுகையும் _________ இருக்கும்.
8. தோழா, _________ ஆடையின்றி எவ்வாறு உள்ளே வந்தாய்?

***********

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | எசாயா 25:6~10a |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 23:1~3a.3b~4.5.6 |
| பதிலுரை: நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். | |
| இரண்டாம் வாசகம்: | பிலிப்பியர் 4:12~14,19~20 |
| வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக! அல்லேலூயா. | |
| நற்செய்தி வாசகம்: | மத்தேயு 22:1~14 அல்லது 22:1~10 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு | : சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**